# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2016 ~ ஜூன் ~ ஜூலை ~ ஆகஸ்ட் வெளியீடு



ஆகாயத்துப் பறவைகளைப் பாருங்கள்...
உங்கள் பரலோக பிதா
அவற்றிற்கும் உணவளிக்கிறார்.
மத்தேயு 6:26

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்-கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுவுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# தேவனின் தெரிந்தெடுப்பு



**நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்**
**யோவான் 15:16**

"என் நேசக் கர்த்தாவே! இந்த வார்த்தைகள் எனது வாழ்க்கையில் இன்று மாத்திரமல்ல, ஒவ்வொரு நாளும் உண்மையும், யதார்த்தமுமாய் இருக்கும்படி நான் விரும்புகிறேன். எனக்கு உதவியருளும்" என்பது நம் ஒவ்வொருவருடைய அன்றாடக விண்ணப்பமாயிருப்பதாக.

நாம் மெய்யாகவே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்றால் நம்முடைய கஷ்டங்களும் பிரச்சினைகளும் எதுவாக இருந்தாலும் தேவன் நிச்சயமாகவே அதற்கு ஒரு பரிகாரத்தை உண்டு பண்ணுவார். நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றாலும், இரட்சிக்கப்படாதவர்கள் என்றாலும் எந்த வயதினராக இருந்தாலும் சரி அல்லது எந்த சூழ்நிலையைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி நாம் இந்த பூமியிலே வசிக்கிற நாட்களிலெல்லாம் ஏதாவது ஒரு பிரச்சினையோ, சிக்கலோ வாழ்க்கையில் இருந்துகொண்டு தான் இருக்கும்.

நாம் கரத்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை சார்ந்து இருப்பதினால், நமக்கு எந்தவிதமான துன்பமும், தொல்லையும், சோதனையும், பிரச்சினையும் இருக்காது என்று தேவன் நமக்கு ஒரு வாக்குத்தத்தமும் அருளவில்லை. அதற்கு ஈடாக நமக்கு கஷ்டங்களும், சோதனைகளும் அதிகரிக்கத்தான் செய்யும்.

காரியங்கள் இவ்விதம் இருக்கும் போது "நான் உங்களை தெரிந்து கொண்டேன் " என்ற வார்த்தையானது இப்பிரச்சினைகள் யாவற்றிற்கும் தீர்வு-காணும் வகையில் தேவன் அருளும் பதிலாகவே இருக்கிறது.

நம்முடைய கர்த்தரால் நாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளும் பொழுது அது நமக்கு எவ்வளவு ஆறுதலையும், தைரியத்தையும், நிச்சயத்தையும் தரும்.

நம்முடைய இன ஜனத்தாரும், அயலகத்தாரும் நம்மை அறிந்திருப்பதைவிட தேவன் நம்மை மிகவும் நன்றாய் அறிந்திருக்கிறார். நமது உள்ளத்தின் கேடுபாடுகளையும், குறைகளையும், தோல்விகளையும் நாம் எவ்வளவாக அவரை துக்கப்படுத்தியிருக்கிறோம். ஏமாற்றியிருக்கிறோம்; மாய்மாலம் பண்ணுகிறோம் என்பதை எல்லாம் அவர் தீர்க்கமாய் அறிந்திருந்த போதிலும், அவர் இந்த வார்த்தைகளை நமக்கு கூறுகிறார். நான் உங்களை தெரிந்துகொண்டேன். ஏனென்றால், அவர் எம்மை விலைக்கிரயம் செலுத்தி வாங்கியிருக்கிறார். அவருடைய இரத்தத்தால் சுத்திகரித்திருக்கிறார்.

அனுதின தேவ இரகசியத்திலிருந்து
சகோ. பக்த் சிங்

# சூழ்நிலைகளை பயன்படுத்துதல்



லூக்கா 2: 36, 37, 38

ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள். அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள்.

ஏறக்குறைய எண்பத்து நான்கு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்.

அவளும் அந்நேரத்தில் வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்.

இத்தீர்க்கதரியானவளைக் குறித்து லூக்கா புத்தகத்தில் மட்டுமே எம்மால் பார்க்கக்கூடியதாகவுள்ளது. அன்னாள் என்ற இப்பெண்மணி ஏழு வருஷம் மட்டுமே தன் கணவனோடே வாழ்ந்தவள் என்பதிலிருந்தும், 84 வயது வரை ஆலயத்தை விட்டு விலகாதிருந்தாள் என்பதையும் வைத்து சிந்தித்தால் அவள் இளமையிலேயே கைம்பெண்ணாகியுள்ளாள் என்று அறியக்கூடியதாயிருக்கிறது.

அக்கால கட்டத்தில் யூதர்கள் மத்தியிலே ஒரு இளம் விதவைக்கு என்ன நிலைப்பாடு காணப்பட்டது என்று நாம் அதிகம் அறிய முடியாவிட்டாலும், அவர்களின் நடைமுறை வாழ்க்கைக்கு சரியான நியாயம் கிடைக்கவில்லை என்பதே உண்மை. ஆண்டவர் ஒரு கட்டத்தில் வேத அறிஞர்களை, பரிசேயர் எனும் நீதிச்சட்ட கொள்ளையினரை குற்றஞ்சாட்டுகிறார். மத்தேயு 23:14 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிறீர்கள் (அபகரிக்கிறீர்கள்). இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள். ஆதலால் இப்பெண்களுக்கு தேவனிடத்திலிருந்து அதிக பாதுகாப்பும், தேவகிருபையும், மனுஷர் தயவும் அவசியமாயிருந்தது.

1. அன்னாளுக்கு தேவன் மிகச்சிறந்த வரத்தை அருளியிருந்தார். அது தீர்க்கதரிசனவரம். இவள் தீர்க்கதரிசியானவள் என்கிறதின் அடிப்படையில் இவளுக்கு ஜனங்கள் மத்தியில் நன் மதிப்பையும், பர்துகாப்பையும் கொண்டு வந்திருக்கலாம்.

2. தன்னுடைய விதவை நிலைமையை அவள் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் அவள் தேவாலயத்தைவிட்டு நீங்காமல் தொடர்ந்தும் இரவும், பகலும் உபவாசித்து, ஜெபித்து தேவனை ஆராதித்து வாழ்ந்தாள் என்பதிலிருந்து அவள் எவ்வளவான கடினமான ஒரு ஆவிக்குரிய பயிற்சியை பெற்றிருக்கிறாள் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

3. அவளுக்கு சுதந்திரம் மற்றும் தெரிந்தெடுப்பு இருந்தது அந்த சுதந்திரத்தை,தெரிந்தெடுப்பை தேவனுடைய காரியங்களுக்காக

அர்ப்பணித்தாள். கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள் (கலாத் 5:1)

4. அவளின் எதிர்ப்பார்ப்பு - மீட்பரின் வரவு. அதைக் காண அவள் ஆவலாயிருந்தாள். மீட்பரை தரிசித்தாள்.

5. அவள் தூய்மையாய் வாழ்ந்த வாழ்வுக்கான பலனைக் கண்டாள். மீட்பரை தரிசித்தாள்.

ஆதலால், சகோதரிகளே! எமது நெருங்கியவர்களின் இழப்பு, எமது சூழ்நிலைகள் எப்படி எம்மை பாதிப்படைய செய்கிறது. எமது தனிமை மற்றும் துயர நிலைமைகளில் நாம் அங்கும் இங்கும் அலைந்து ஆதரவை தேடுகிறோமா? அல்லது ஒரு போலித்தனமான வாழ்க்கை வாழ்கிறோமா? தூய்மையாக வாழ்கிறோமா?

சூழ்நிலைகள் எப்படியாயினும், அன்னாளைப்போன்று நாம் எமது வாழ்க்கையை அர்த்தமுள்ள வாழ்க்கையாக்குவோம். எமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க ஆண்டவருடைய பாதத்தை, இறுக பற்றிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. தேவ பிரசன்னத்தில் தரித்திருப்போம். எமக்கு மகிமையான எதிர்ப்பார்ப்பை ஆண்டவர் அருளியுள்ளார்.

அன்னாள் எமது மீட்பரை, இரட்சகரை குழந்தை வடிவத்தில் தரிசித்தாள். ஆனால், நான் எனது மீட்பரை, இரட்சகரை இராஜாதிராஜாவை காண்பேன்.

நான் முழுத்தீர்க்கதரிசனமான வேதத்தை கையில் வைத்துள்ளேன். ஆதலால் நான் யார்?

- Sis: Tilaka -

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

## யாத்திராகமம்

| | |
|---|---|
| எழுதியவர் | : மோசே |
| காலம் | : கி.மு. 1445 - 1404 |
| அதிகாரங்கள் | : 40 |
| வசனங்கள் | : 1213 |

**முக்கிய பாகங்கள் :**

- இஸ்ரவேல் ஜாதியினதும் மோசேயினதும் ஆரம்பம் (1:1 - 3:25)
- மோசேக்கு பணி வழங்கப்படல் (3:1 - 4:17)
- பத்து வாதைகள் (7:14 - 11:10)
- பஸ்காவின் ஆரம்பம் (12:1 - 13:14)
- செங்கடலை கடத்தல் (14:13 - 31)
- பத்து கட்டளைகள் (20:1 - 17)
- வாசஸ்தலத்துக்கான அறிவுறுத்தல்கள் (24:12 - 27:21)
- வாசஸ்தலத்துக்கான பலிகள் (35:1 - 36:7)
- வாசஸ்தலம் கட்டப்படல் (36:8 - 39:43)
- வாசஸ்தலம் நிறுத்தப்படலும் தேவன் அதை நிரப்புதலும் (40:34-38)

# வேதத்தில் காணப்படும் தானியங்களை போரடிக்கிற களங்கள்



ஒரு களத்தில் பலவிதமான வேலைகள் காணப்பட்டாலும், அவை முக்கிய வேலையாக கணிக்கப்படுவது பதரை(சாவிக்கதிர்கள்) காற்றை பிரயோகித்து பதரை பறக்கடித்து நல்மணிகளை சேர்ப்பதே. ஆதலால், இந்த களங்களின் ஊடாக தேவன் எங்களை எவ்விதமான அனுபவத்திற்குள் அழைத்து செல்கிறார் என்பதை தொடர்ந்தும் கவனிப்போம்.

**ஆத்தாத்தின் போர்க்களம்:**

முதலாவதாக ஆத்தாத்தின் போர்க்களத்தைக் குறித்து அறிய வேண்டுமென்றால், அதன் பின்னணியானது யோசேப்பின் வாழ்க்கையோடு தொடர்புடையதாயுள்ளது.

ஆதியாக-மம் 37: 1-3, 18-20 ல் ஆரம்ப சரிதை காணப்படுகின்றது. யோசேப்பு சிறு வயதிலிருந்தே அவன் தேவ பயமுள்ளவனும், உண்மையுள்ள மகனுமாய் தன் வாழ்க்கையை தொடருகிறான். தன் சகோதரர்களின் பொறாமைக்கு ஆளாக்கப்பட்டவனாய், அந்நியர்களுக்கு அடிமையாக 20 வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டு மிகுந்த மனவேதனையடைந்தவனாய், வீண்பழிசுமந்து, சிறைச்சாலைக்கு சென்று பின்பு அவன் எகிப்து நாட்டின் பிரதம மந்திரி ஆகிறான் (ஆதி 42: 6) இவைகள் எல்லாம் எப்படி இடம் பெற்றன? ஆம்! தேவனானவரே அவன் வாழ்க்கையில் இத்திட்டங்களை செயற்படுத்தினார்.

தொடர்ந்தும், ஆதி 45:3,4ன் படி அவன் இப்போது தன்னுடைய வம்சத்திற்கும், எகிப்து நாட்டிற்கும் இரட்சகனாக காணப்படுகிறான். இவனுடைய சரிதை, பதவி, அந்தஸ்துடன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பார்ப்போமானால் அவர் இஸ்ரவேலரில் ஒருவராய் பிறந்து தன் சொந்த ஜனங்களால் அற்பமாய் எண்ணப்பட்டு 30 வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டு, துன்பப்படுத்தபட்டு, மரித்தார். அவர் உயிர்த்தெழுந்தார், அவர் வருவார். இஸ்ரவேலரை தொடர்ந்தும் அரசாள்வார். புறஜாதிகள் வெட்கி தலைக்குனிந்து புலம்புவார்கள். இவரே மேசியாவென்று புகழ்வர். எபிரெயர் 3:6

யோசேப்பு தன் தகப்பனையும், சகோதரர்கயையும் சந்திக்கிறான். எகிப்திலே அவர்களோடு வாழ்ந்துவரும் வேளையில் அவனுடைய தகப்பன் நல்ல முதிர் வயதிலே மரிக்கிறான். தன் தகப்பனின் அடக்க ஆராதனையை யேசேப்பு அதை சிறந்த, நீண்ட ஊர்வலமாக நடத்தினான். இங்குதான்

நாம் ஆத்தாத்தின் போர்க்களத்தைப் பார்க்கிறோம். ஆதியாகமம் 50:9,10 அவர்கள் யோர்தானுக்கு அக்கரையில் இருக்கிற ஆத்தாத்தின் போர்க்களத்தில் வந்தபோது, அவ்விடத்திலே பெரும் புலம்பலாகப் புலம்பினார்கள். அங்கே தன் தகப்பனுக்காக ஏழுநாள் துக்கங்கொண்டாடினான். இம்மரணத்தில் மூன்று விதமான குழுவினர் அழுதார்கள்.

1. யோசேப்பு உண்மையிலேயே அழுதான்

2. யோசேப்பின் உடன் ஊழியர்கள் யோசேப்பு ஏதும் நினைத்துவிடக்கூடாதே என்றும் அவனின் அதிகாரத்தை நினைத்தும் போலி சம்பிரதாயங்களில் அழுதிருக்கலாம்.




3. யோசேப்பின் சகோதரர் தங்கள் தகப்பனின் மரணத்திற்கு பின் இவன் நம்மை என்ன பண்ணுவானோ என்ற கவலையோடும் அழுதிருக்கலாம்.

யோசேப்பு அவர்களை மன்னித்து இருந்தாலும் அவர்களுக்கு இன்னும் குற்றவுணர்வு மறையாமல் இருந்தது. அதை ஆதியாகமம் 50: 14 - 18

தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின் சகோதரர் கண்டு: ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்குச் சரிக்குச் சரிக்கட்டுவான் என்று சொல்லி, யோசேப்பினிடத்தில் ஆள் அனுப்பி,

உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவு செய்து மன்னிக்கவேண்டும் என்று உம்முடைய தகப்பனார் மரணமடையும் முன்னே, உமக்குச் சொல்லும்படி கட்டளை இட்டார்.

ஆகையால், உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்க வேண்டும் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னார்கள். அவர்கள் அதை யோசேப்புக்குச் சொன்ன போது, அவன் அழுதான்.

பின்பு, அவனுடைய சகோதரரும் போய், அவனுக்கு முன்பாகத் தாழ விழுந்து: இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள்.

ஆதலால் நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டும். அதைப்போலவே நாமும் மற்றவர்களின் உயர்வை, வாழ்வைக் கண்டு பொறாமைப்பட்டு அதன் விளைவாக துன்பப்படுத்தி இருக்கிறோமா? எம்மையே சோதித்துப் பார்ப்போம். ஆண்டவரின் ஆவிக்குரிய நன்மைகளினால் பொறாமை எனும் பதரை நீக்குவோம்.

- Bro: Neville -

# தேவ பயம்

- Bro. Andrew Ramanathan -



கர்த்தருக்கு பயப்படுதலானது என்ன? கர்த்தருக்கு பயப்படுதலைப் பற்றி கலாநிதி C. I. Scofield அவர்கள் இவ்வாறு வரைவிளக்கனப்படுத்துகிறார்: தீமையை வெறுக்கிற கனத்துடனான பக்தியாகும். அதாவது தேவ பயமானது, தேவன் மீது கொண்டுள்ள, அதாவது பக்தியாகும். தேவ பயமானது கிறிஸ்தவ விசுவாசிக்குள் இருக்க வேண்டிய பிரதான முக்கிய அம்சமாகும். ஏனென்றால், தேவ பயத்தைப்பற்றி வேதாகமம் முழுவதுமாக குறிப்பிடப்பட்டுள்ளதால்.

"ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன். அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள்" உபாகமம் 4:9

இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதின் படி, தேவ பயமானது எமக்கு பிறப்பிலேயே கிடைக்கும் ஒரு உணர்வல்ல. ஆனால் நாம் பயத்தைக்கற்றுக்கொண்டு எமக்குப் பின்வரும் பரம்பரைக்கும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டியதொன்றாகும்.

கர்த்தருக்கு பயப்படுதலானது நாம் படைக்கப்பட்டதற்கும் நாம் அழைக்கப்பட்டதற்குமான நோக்கங்களில் ஒன்றாகும் என்பது என்னுடைய கருத்தாகும்.

உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்து, அவருடைய நாமத்தைக் கொண்டே ஆணையிடுவாயாக. உபாகமம் 6:13

கிறிஸ்தவ விசுவாசி தேவனுக்கு பயந்தாக வேண்டும். ஏனென்றால், வேதத்தில் நமக்கு இப்படி செய்யும் படி கட்டளையிடப்பட்டுள்ளதால். மேலும் நாம் மற்ற தெய்வங்களுக்கோ மனுஷர்களுக்கோ பயப்பட தேவையில்லை.

பரிசுத்த வேதாகமத்தில் 2 இராஜாக்கள் 17:38ல் அந்நிய தேவர்களுக்கு நாம் பயப்படத்தேவையில்லை எனவும் நீதிமொழிகள் 29:25ல் மனுஷனுக்குப்பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியென்றால் நாம் தேவனுக்கு மட்டும் பயந்து தேவ பக்தியோடு இருப்பது மட்டும் போதுமானது.

தேவபயம் இல்லாதிருப்பின், அதன் விளைவு பாவம் உண்டாவதேயாகும். கடைசியில் பரிதாபகரமாக அழிவை அடைய வேண்டியதாகும். ஆகவே, தேவன் நமக்கு கட்டளையிட்டுள்ளதன் படி, அந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தேவபயத்துடன் வாழ்வோம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைக்கொண்டு ஆதி சபையை ஆரம்பித்த சீஷர்கள் நமக்கு பெறுமதி-மிக்க மாதிரியை முன்வைத்திருக்-கிறார்கள்.

அப்போஸ்தலர் 9:31ன் படி, சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்-படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.

அப்படியெனில், நாம் அவர்களை மாதிரிகளாக கொண்டு, தேவபயத்-தோடு பக்தியுள்ளவர்களாக, சபையின் வளர்ச்சிக்காகவும் எமது ஆவியின் வளர்ச்சிக்காகவும் நாம் வாழ முயற்சி செய்வோம்.

தேவனுக்கு பயப்படுவதால் நாம் பெறும் பலன்களாவன:

- தேவனுடைய இரக்கம் நம் மீது ஊற்றப்படுகிறது. (சங்கீதம் 103:13)
- தேவ ஆசீர்வாதம் (சங்கீதம் 112:1)
- தீமையிலிருந்து விலக்கும் (நீதிமொழிகள் 16:6)
- கிறிஸ்தவ ஐக்கியம் உண்டாகும் (கலாத்தியர் 3:16)
- தேவனைப்பிரியப்படுத்துவோம் (அப்போஸ்தலர் 10:35)
- தேவனை சந்தோஷப்படுத்தலாம் (சங்கீதம் 147: 11)

தேவனுக்கு பயப்படுவது
ஏன் அவசியம்?

- தேவனை ஆராதிக்க (சங்கீதம் 5:7)
- ஊழியஞ்செய்ய (சங்கீதம் 2:11)
- நியாயஞ்செய்ய (2 நாளாகமம் 19:6-9)
- பாவத்தில் இருந்து விவகியிருக்க (யாத்திராகமம் 20:20)
- நம் பரிசுத்தம் பரிபூரணமடைய (2 கொரிந்தியர் 7:1)

நாம் தேவ பயத்தோடு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையின் எதிர்பார்ப்போடு வாழ்வோம்





# சந்தர்ப்பவாதிகள்

- Bro. Xavier -

தேவன் எப்போதும் உண்மையுள்ளவராக இருக்கிறார். அது அவருடைய மாறாத குணாதிசயம். உண்மையில் தேவன் சில வேளைகளில் செயற்படும் விதமாவது எம்மால் புரிந்துகொள்ள மிகக் கடினமாக உள்ளது.

ஆன போதிலும், சிலர் இதனை உணர்வதாக இல்லை என்பதும் உண்மை. அவரை மக்கள் ஏனைய தெய்வ நம்பிக்கையை கொண்டு செயற்படுவது போலவே செயல்பட விளைகின்றனர். என்னவெனில் புறமத நம்பிக்கை உள்ளவர்கள் தங்களது தெய்வ நம்பிக்கையை தங்களுக்கு வரும் துன்ப துயரங்களின்போது மிக பக்தியாகவும் - விசுவாசமாகவும் காண்பிப்பார்கள். அப்பிரச்சினைகள் தீர்ந்தவுடன் அவர்களது தெய்வ பக்தி, விசுவாசம் யாவும் தலை கீழாக மாறிவிடும். உதாரணமாக: இயேசுவின் பாடுகளின் தியான நாட்களில் (லெந்து நாட்கள்) சிலர் மாமிசம் உண்ணாமலும், மதுபானம் பண்ணாமலும் தினமும் ஆலயங்களுக்கு சென்று வழிபடுபவராக இருப்பார்கள். அந்நாட்கள் முடிந்தவுடனே அவர்களது தெய்வ பக்தி போய்விடும். இனி அடுத்த வருடம் வரும்போது பக்தி ஏற்பட்டு மீண்டும் முன் கூறியதுபோல் செயற்படுவார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் பார்வோன் என்ற மனிதன் தனக்கும், தன் தேசத்திற்கும் பிரச்சினைகள் வரும்போது தேவனைத் தேடுவதும் தேவ ஊழியர்களை அழைத்து ஆலோசிப்பதும் எங்களுக்காக தேவனை நோக்கி ஜெபியுங்கள் என வேண்டுவதுமாகவே செயற்படுகிறான். நாங்கள் யாத்திராகமம் 3 ஆம் அதிகாரம் முதல் 14 ஆம் அதிகாரம் வரை வாசித்து அச்சம்பவங்களை அறிந்துகொள்ளலாம். பார்வோன் தேவனது தண்டனைகளை அனுபவிக்க நேரிடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவ ஊழியர்களாகிய மோசேயையும், ஆரோனையும் அழைத்து ஆலோசிப்பதும், ஜெபிக்க கெஞ்சுவதுமாக இருந்தான். பிரச்சினைகள் மாறிவிடும் சூழ்நிலைகளில் பின் தன் மனதை மாற்றிக் கொள்வான்.

யாத்திராகமம் 8: 8, 15, 25, 28, 32
யாத்திராகமம் 9: 27, 28, 35
யாத்திராகமம் 10: 16, 17, 20, 24
யாத்திராகமம் 12: 31,32
யாத்திராகமம் 14: 5-9

இவ்வேத வசனங்களை நீங்கள் வாசிப்பீர்களானால் பார்வோன் எவ்வாறு தனக்கு நேரிட்ட துன்பங்களின் போது ஆண்டவரே! ஆண்டவரே! என்று கூப்பிட்டதும் துன்பங்கள நீங்கியதும் ஆண்டவரை மறுதலித்ததையும் காண முடியும்.

இன்று அநேக மக்கள் பார்வோன் போன்றே தமது வாழ்க்கையில் போராட்டங்கள், பிரச்சினைகள் வரும் போது மிகவும் பக்தியாகவும், மனத்தாழ்மையுடனும் இயேசுவே! இயேசுவே என்று கூப்பிடுவார்கள். அத்தோடு சபைத்தலைவர்களை சந்தித்து அல்லது அழைப்பித்து தங்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக ஜெபிக்கவைப்பதும், ஆலோசனைகள்

கேட்பதுமாகவும், தனிப்பட்ட உபவாச ஜெபங்கள் ஏறெடுக்கப்படுவதுமாக இருப்பார்கள். எல்லாம் ஒரு நல்ல நிலைமைக்கு வந்தவுடனே அவர்கள் அப்படியே தங்களது பழைய வாழ்க்கை முறைக்கு திரும்பி போய்விடுவார்கள். இதுதான் சந்தர்ப்பவாதம் என்பதாகும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களும் ஒரு காலத்தில் பல துன்பங்களுக்கு முகங்கொடுத்த போது ஆண்டவரே! இயேசுவே! என்று கூப்பிட்டும் தனிப்பட்ட உபவாசம் இருந்தும், சபையோடு ஐக்கியம் கொண்டவர்களாயும், இருந்து பிற்பாடு பிரச்சினைகள் தீர்ந்த பின்பு உடன் ஆண்டவரை மறந்து வாழ்க்கையை நடத்திகொண்டேயிருந்தால், இன்றே ஆண்டவர் இயேசு உங்களுக்கு செய்த நன்மைகளை நினைந்து மனந்-திரும்பி, ஆண்டவரிடம் வாருங்கள்.

அவரது அன்பு உங்களை அழைக்கிறது. சபையின் ஐக்கியத்-திற்கு உங்களை அழைக்கிறோம். வாருங்கள் சகோதர! சகோதரிகளே! ஆண்டவர் இயேசு உங்களை மறபடியும் கட்டியெழுப்பவார். தேவ-கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக! ஆமென்.




## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

### ஞாயிற்றுக்கிழமை

மு.ப. 8.15 - ஞாயிறு பாடசாலை
மு.ப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

### செவ்வாய்க்கிழமை

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

### புதன் கிழமை

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

### வெள்ளிக்கிழமை

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற
உங்கள் அனைவரையும்
அழைக்கிறோம்!



# என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திர...



- Bro. Reginald John -

என் சிறுநீரக நோயிலிருந்து கர்த்தர் இயேசு கிறிஸ்து என்னைக் காப்பாற்றிய என் வாழ்வின் கதையே இதுவாகும். நான் வைத்தியர்களிடம் ஆலோசித்த போது, என் X-கதிர் பரிசோதனையின் முடிவுகளை பரிசோ-தித்த பின்பு, என் சிறுநீரகம் பாதிக்க பட்டிருப்பதாகவும் சிறுநீருடன் இரத்தம் வெளியேறுவதாகவும் என் சிறுநீரகப்-பையில் இரு கற்கள் இருப்பதாகவும் கூறியதோடு, களுபோவிலை பகுதியில் உள்ள வைத்தியசாலையில் X-கதிர் பரிசோதனை செய்யும் போது எனக்கு 86 வயதாயிருந்ததால் என் வயதின் காரணமாவும் என் உடலில் சத்திர-சிகிச்சையை தாங்குமளவுக்கான இரத்தம் போதாமலிருந்ததாலும் எனக்கு சத்திரசிகிச்சை செய்ய முடியாது எனவும், செய்தால் இறந்து விடுவேன் எனவும் பிரதான சத்திரசிகிச்சை நிபுணரான Dr. அனுருத்த அவர்கள் கூறினார்கள். மேலும், தாங்கள் பொறுப்-பேற்க முடியாது என கூறி, மருந்து-களைக்கொடுத்து, உயிர்வாழக்கூடும் வரைக்கும் வாழும் படி கூறினார்.

ஆகவே, நான் மிகவும் துக்கமடைந்-தவனாய், நான் விசுவாசிக்கும் என் ஆண்டவர் இயேசுவிடம் மன்றாடினேன். இயேசு கிறிஸ்துவில் எனக்கு மிகப்-பெரிய விசுவாசம் உண்டு ஏனென்றால், எனக்கு ஆறு வயதிருக்கும் போது, நான் பாடசாலை சென்று திரும்பும் வழியில் ஓர் வாகன விபத்தில் அடிபட்டு வைத்தியசாலைக்கு கொண்டு போகப்-பட்ட போது இறந்தவனாக காணப்பட்டு பிணவறையில் போடப்பட்ட நேரத்தில் என் உடலை எடுக்க வந்த என் வீட்டார் நான் சுவாசிப்பதைக்கண்டனர். உடனடியாகவே வைத்தியர்கள் என்னை சத்திரசிகிச்சை செய்து என் வலது காதுக்கு கீழ் பாதிக்கப்-பட்டிருந்த கழுத்துப்பகுதிக்கு சிகிச்சை செய்து என் முழு தலைக்கும் கழுத்துக்-கும் மருந்து கட்டினார்கள். நான் வைத்தியசாலையிலே ஏறத்தாழ ஆறு மாதங்களாக வைக்கப்பட்டிருந்தேன். அந்த வயதில், என் ஆண்டவர் என்னை மரணத்திலிருந்து கூட பிழைக்கச்-செய்தார், ஆகவே, அவ்விதமாகத்தான், உண்மையிலேயே தேவன் இருக்கின்-றார் எனவும் அவருடைய வார்த்தை-யாகிய வேதாகமம் உண்மையானது எனவும் விசுவாசித்தேன்; முற்றிலும் குணமடைந்தேன்.

என் சிறுநீரக கோளாறுக்கு சத்திர சிகிச்சை செய்ய முடியாது என கூறி இப்பொழுது இரண்டு வருடங்கள் கழிந்து இப்பொழுது எனக்கு 88 வயது. ஆகவே நான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் அதிகமாக ஜெபித்து வந்தேன். அவர் அநேக வியாதியஸ்-தரை குணமாக்கியவர்; குருடருக்கு பார்வையளித்தவர்; மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்களுக்கு

பிறகு லாசருவை உயிரடையச் செய்தவர்; தன்னை விசுவாசித்தவர்களுக்கு அநேக அற்புதங்களைச் செய்தவர். ஆகவே நானும் அவரை விசுவாசித்து அவரிடம் ஜெபித்தேன். ஆண்டவர் என்னை புதிய மனிதனாக்கி என்னை குணமாக்கினார். என்னுடைய எல்லா இச்சைகளையும் மாம்சத்தையும் நான் முற்றிலும் விட்டு விட்டு, ஆண்டவர் இயேசுவை கற்று விசுவாசித்து பின்பற்றுவதற்காக அவர் எழுதிக்கொடுத்துள்ள வேதாகமத்தை தொடர்ந்து வாசித்து வருகிறேன். அவர் தமது பரிசுத்த ஆவியையும் எனக்குள் இருப்பதற்கு கொடுத்திருப்பதாக வாக்குக்கொடுத்திருக்கிறார். ஆண்டவர் என் எல்லா வியாதிகளிலிருந்தும் எவ்வித சத்திரசிகிச்சையுமில்லாமல் குணமாக்கியுள்ளார் எனக் கூறுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

என் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உண்மையிலேயே தேவனுடைய குமாரன் எனவும் அவரே உயிருள்ள தேவனும் இரட்சகரும் எனக்காய் கரிசனை கொள்கிறவரும் என் கேடகமும் என் கோட்டையும் எனவும் என் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு விட்டதெனவும் பிசாசின் கையில் இருந்து அவர் என்னை விடுவித்து விட்டார் எனவும் முழுவதுமாக விசுவாசிக்கிறேன். என்னை இரட்சிப்ப தற்காக தம்மையே சிலுவையில் கொடுத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குள் நான் சந்தோஷமாயிருக்கிறேன். என்னை மட்டுமல்ல உங்களையும் இரட்சிப்பார். அவர் உன்னை இரட்சிப்பாரா இல்லையா என விசுவாசித்துப்பார். ஆனால் நீ விசுவாசித்தால் பரலோகம் போக உனக்கு நித்திய ஜீவனைத்தருவார். இது என்னுடைய சாட்சியும் என் ஆண்டவரோடு நான் அனுபவிக்கும் என்னுடைய உண்மையான அனுபவமுமாகும்.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16

## கிறிஸ்துவும் அவரது சபையும்

கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து, தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.
எபேசியர் 5:25,27

தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்டார்
அப்போஸ்தலர் 20:28

தம் சபையைக் கட்டுகிறார்
மத்தேயு 16:18

திருவசனம் எனும் தண்ணீரினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறார்
எபேசியர் 5:26

ஆவியின் வரங்களினால் சபையை அலங்கரிக்கிறார்.
எபேசியர் 4:13

சபையை மகிமைப்படுத்துவார்
எபேசியர் 5:27

மணவாட்டியாகிய சபையை மணமுடிப்பார்
வெளிப்படுத்தல் 19:7

# விசுவாசமும் கீழ்ப்படிதலும்

வாசிக்க வேண்டிய வேதபகுதி: மத்தேயு **9:27 – 31**



மேற்குறிப்பிடப்பட்ட வேதபகுதியில் இயேசுவானவர் வழியிலே போகையில் இரண்டு குருடர்கள் அவர் பின்னே சென்று தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்

ஆனால், அவர் அவர்களின் கூப்பிடுதலுக்கு மறு உத்தரவு அருளவில்லை. எனினும் அக்குருடர் சோர்ந்து போய்விடவில்லை. அவர்கள் விசுவாசத்தில் விடாமுயற்சியுடையவர்களாய் அவர் தங்கியிருந்ந வீடு வரைக்கும் வந்தார்கள்.

இயேசு அவர்களை நோக்கி இதைச்செய்ய எனக்கு வல்லமை உண்டென விசுவாசிக்கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் "ஆம் விசுவாசிக்கிறோம் ஆண்டவரே" என்றார்கள். அப்பொழுது அவர்களுடைய கண்களை அவர் தொட்டு உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது.

ஆம்! விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் (மாற்கு 9:23). அதாவது விசவாசமுள்ளவர்களுக்கு காரியங்கள் எல்லாம் கைகூடி வரும். ஏனெனில், விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபிரெயர் 11:6). இங்கே இந்த குருடர்களுக்கு இந்த விசுவாசம் எப்படி வந்தது?

வேதம் கூறுகிறது விசுவாசம் கேள்வியினால் (கேட்கிறதினால்) வரும் (ரோமர் 10:17). "காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று ஆண்டவர் சொல்கிறார் (யோவான் 20:29).

இந்த இரண்டு குருடரும் இயேசுவிடம் வருவதற்கு முன்பு இயல்புக்கு அப்பாற்பட்ட அற்புதம் இயேசுவானவரால் நடப்பிக்கப்பட்டது. அந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தம் ஆயிற்று (மத்தேயு 9:26). இவர்கள் அந்த அற்புதத்தைக் கண்ணாரக் காணவில்லை. காது கொடுத்து கேட்டார்கள். அதை கேள்விப்பட்டதினாலேயே அவர்களுக்கு விசுவாசம் வந்தது. அதனால் அவர்கள் விசுவாசித்தது மட்டுமல்லாமல் விடாமுயற்சி உடையவர்களாய் இயேசுவை தேடி வந்தினால் பார்வையடைந்தார்கள்.

இன்று சுவிசேஷத்தை கேள்விப்படும் அநேகர் கடவுளுக்கு நிபந்தனை விதிக்கும் வண்ணமாக ஆண்டவர் முதலில் எனக்கு இந்தக் காரியத்தை செய்தால் அப்புறம் நான் விசுவாசிப்பேன் எனக் கூறுவார்கள். ஆனால், ஆண்டவர் கூறுகிறார் "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவான் 11:40). ஆம்! நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவான் 5:4)

இந்த இரண்டு குருடருடைய சம்பவத்திலிருந்து நாம் சிந்திக்க வேண்டிய இன்னுமொரு பகுதி உண்டு. அது என்னவெனில், மத்தேயு 9:29,30,31 வசனங்களில் “அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.

உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

அவர்களோ புறப்பட்டு, அந்தத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம்பண்ணினார்கள்.

மேலெழுந்தவாரியாக நமது மனித நீதியின்படி பார்க்கின்ற பொழுது பார்வையடைந்த அக்குருடரின் செயல்பாடு தவறானாதாக தென்படாது. தாம் பெற்ற நன்மைக்குப் பிரதியீடாக அவருடைய புகழ்ச்சியைப் பிரசித்தம் செய்தனர். இது நன்றியுள்ள ஒரு இருதயத்தின் வெளிப்பாடாகவே அமைகின்றது. ஆனால், அவர்கள் இயேசுவின் கண்டிப்பான கட்டளையை மீறிவிட்டார்கள். அதாவது அவர்கள் அவரின் வார்த்தையை மதிக்கவில்லை. அவரை ஆண்டவரே! என்று அழைத்திருந்தாலும், ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படியத் தவறிவிட்டனர்.




இந்நாட்களின் கூட நம்மில் அநேகர் இவ்விதமாக செயற்பட்டு விடுகிறோம். எப்படியெனில் ஆண்டவரின் நாம மகிமைக்காகவே செய்கிறோம் என நினைத்து அவருடைய வார்த்தைக்கு புறம்பான செய்கைளைச் செய்து விடுகிறோம். கிறிஸ்தவ சமுதாயத்திலே இவை போன்றே அநேக காரியங்கள் தற்காலத்திலே அதிகமாக நடைபெறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

நாம் நம்முடைய வாழ்க்கையிலும், ஊழியங்களிலும் கர்த்தருடைய வார்த்தைக்கு அமைவாகவே எதையும் செய்ய நம்மை அர்ப்பணிக்க வேண்டும். ஆண்டவருடைய நாம மகிமைக்காகவே அல்லது அவருடைய பெயர் பிரஸ்தாபத்திற்காகவே என எண்ணி அவருடைய வார்த்தையை மீறி விடாதபடி கவனமாயிருக்க வேண்டும். ஏனெனில், தமது வார்த்தையை அவர் மகிமைப்படுத்தியிருக்கிறார். (சங்கீதம் 138: 2)

அந்த இரண்டு குருடர்களும் தமக்குப் பார்வை கிடைத்ததின் சந்தோஷத்தினாலே அல்லது ஆர்வம் மிகுதியினாலே ஆண்டவரின் கண்டிப்பான கட்டளையைப் பொருட்படுத்தாமல் செயல்பட்டதைப் பார்க்கிறோம். என்ன தான் அவர்கள் ஆண்டவரைப் பற்றி நன்மையாக பிரஸ்தாபித்திருந்தாலும் அவர்கள் செய்தது மிகப்பெரும் தவறாகும். விசுவாசத்தினாலே பார்வையைப் பெற்றுக்கொண்ட அவர்கள் ஆண்டவரைப் பிரஸ்தாபப்படுத்துகின்றோம் எனக் கருதி அவருடைய வார்த்தையை மீறி நடந்து கொண்டனரே! அவருடைய கற்பனைக்குக் கீழ்ப்படிய தவறிவிட்டனரே! ஆம்! கீழ்ப்படிதல் இல்லாத விசுவாசம் பிசாசுகளின் விசுவாசம் என வேதத்தில் எழுதப்பட்டுள்ளது (யாக்கோபு 2:19).

நாமும் கூட விசுவாசத்தினாலே நன்மைகளை அநுபவிக்கலாம் ஆனால், எதைச் செய்தாலும் ஆண்டவரின் வார்த்தைக்கு நடக்க எம்மை அர்ப்பணித்துள்ளோமா? சிந்தித்து செயலாற்றுவோம்.

- Bro. Gnanendren -



# உருவாட்டம் முதல் உருமாற்றம் வரை



மாற்கு 5: 1 - 20

- Bro. Dinesh -

(சென்ற இதழின் தொடர்ச்சி)

**அறிமுகம்**

இவ்வேதபகுதியானது பிசாசு பிடித்து பெரும் வேதனை வாட்டத்தோடு இருந்த ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்தித்து குணமடைந்து தன் வாழ்வில் மாற்றத்தை அனுபவித்த கதையாகும். வாழ்வில் உண்மையான மாற்றம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்திப்பதால் மட்டுமே கிடைக்கும். வேறெதினாலும் வாழ்க்கையில் மாற்றத்தைக்கொண்டுவர முடியாது.

2 கொரிந்தியர் 5:17. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

உங்களுக்கு வாழ்க்கையில் உண்மையான மாற்றம் வேண்டும் என்றால், நீங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சந்திக்க வேண்டும். இம்மனிதன் குணமடைவதற்கு முன் இருந்த நிலைமையைப் பற்றிய விபரமானது, பாவத்தில் இருப்பவர்களுடைய நிலைமையை ஆவிக்குரிய கருத்தில் வெகுவாக ஒத்திருக்கிறது. அதேபோல, அவன் குணமடைந்ததற்கு பின்பதான விபரமும் ஒரு விசுவாசியில் காணப்பட வேண்டிய குணங்களை எடுத்துக்காட்டுகின்றன.

### வேதனைப்படுத்தப்பட்ட மனிதன்

1. **கல்லறை வாசி** - வசனம் 3
2. **சங்கிலி உடைப்பவன்** - வசனம் 3,4
3. **மலை சஞ்சாரி** - வசனம் 5
4. **தன்னைத்தானே அழித்துக்கொள்பவன்** - வசனம் 5
5. **மதரீதியாக கதைப்பவன்** - வசனம் 7

### மாற்றப்பட்ட மனிதன் - வசனம் 15 - 20

1. **ஐக்கியம்** - இந்த மனிதன் குணப்பட்ட பின்பு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடும் அவரது சீஷரோடும் காணப்பட்டான் வசனம் 15. இது, இரட்சிக்கப்பட்ட ஒருவன் கொள்ள வேண்டிய ஐக்கியத்தின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட ஒருவன் அந்நியோந்நிய ஐக்கியத்தில் நிலைத்திருப்பது அவசியமாகும். அப்போஸ்தலர் 2:42, எபிரேயர் 10:25.

ஐக்கியம் என்பது மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம்:

1. சமுகமளித்தல்
2. தொடர்புகொள்ளல்
3. சந்திப்பு

**2. அமர்வு** - ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அமர்வதும் எம் கிரியைகளிலிருந்து ஓய்வு பெறுதலும்

மாற்றமடைந்த மனிதனைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது விவரமாவது, அவன் உட்கார்ந்திருந்தான் என்பதாகும். அவன் மாற்றப்படுவதற்கு முன்னர் அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. ஆனால் இப்பொழுது, அவனில் ஒரு தெளிவான மாற்றம் தெரிகிறது. அமர்ந்திருப்பது நமக்கு இரண்டு விடயங்களை வலியுறுத்துகிறது.

- **அமர்ந்திருத்தல்** - வேதம் வாசித்தலும் ஜெபித்தலும் (லூக்கா 10:39)
- **கிரியைகளை விட்டு ஓய்வு** - இரட்சிப்பின் நிச்சயத்தோடு இருத்தல்


**3. ஆடை அணிந்திருத்தல்** - சாட்சி (2 கொரிந்தியர் 5:17)

இவனைப்பற்றி சொல்லப்பட்டுள்ள மூன்றாவது விபரமாவது இவன் வஸ்திரம் தரித்திருந்தான் என்பதாகும். இது வெளிப்படையான தெளிவான சாட்சியைக்-குறிக்கிறது. நாம் இரட்சிக்கப்பட்ட பின் மற்றவர் காணத்தக்க வெளிப்படையான தெளிவான சாட்சி கொண்டிருத்தல் அவசியமாகும். இவனைக்கண்டவர்கள் இவன் வாழ்வில் தெளிவான மாற்றத்தைக் கண்டார்கள். நம் வாழ்வும் இப்படியாகத்தான் இருக்க வேண்டும். நாம் கூறத்தக்க கதை ஒன்று நம்மிடம் இருக்க வேண்டும்.

உங்கள் வாழ்வில் பின்வருவன உள்ளனவா என கருத்தில் கொள்க:

- எங்களையும் மற்றவர்களையும் வேறுபிரித்து அறியக்கூடியதாயுள்ளதா?
- கிறிஸ்துவுக்குள் இல்லாதர்களின் வாழ்வும் நம் வாழ்வும் ஒத்திருக்கிறதா?
- ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தன்மையும் பண்பும் நம்மிடமுள்ளதா?
- மற்றவர்கள் நம்மை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீடர்களாக அடையாளங் காண்கிறார்களா?
- மற்றவர்கள் நம்மைக் காண்பது வாய்ச்சொல் கிறிஸ்தவர்களாகவா அல்லது வாழும் கிறிஸ்தவர்களாகவா?

நம் வாழ்க்கை முறையானது நம்மைக் கிறிஸ்தவர்களாகக் காட்ட வேண்டும். வஸ்திரந்தரித்திருத்லானது நம் உடைகளைக் குறிப்பதல்ல.



4. **புத்தி தெளிதல்** - தெளிந்த புத்தியுடனிருத்தல் (2 தீமோத்தேயு 1:7/ எபே 5:18)

இவனைப்பற்றி சொல்லப்பட்டுள்ள நான்காவது விபரமாவது இவன் புத்தி தெளிந்திருந்தான். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும் போது நாம் தெளிந்த

புத்தியுள்ளவர்களாயிருப்போம். பரிசுத்த ஆவியுள்ள ஒருவன் காரியங்களைப் தெளிவாக பகுத்தறியக்கூடியவனாக இருப்பான். நாம் உபதேசங்களாலும் போதனைகளாலும் வெறிகொள்ளாமல் (எபே 4:14), நம் மனப்பான்மைகளினால் வெறிகொள்ளாமல், நம் கருத்துக்கள் முடிவுகளால் வெறிகொள்ளாமல் நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருப்போம். காரியங்களை கவனமாகவும் தெளிவாகவும் தீர்த்துக்கொள்வோம்.

5. **ஊழியஞ்செய்தல்** - தேவன் தனக்கு செய்தவற்றை பிரசித்தம் பண்ணினான் (மாற்கு 5:18-20)

ஐந்தாவது விடயமாக, இவன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினான் என காண்கிறோம். தேவனுக்கு ஊழியஞ்செய்வதைக் குறித்து ஐந்து விதமான பாடங்களை நாம் இம்மனிதனின் ஊழியத்தின் மூலம் கற்றுக்கொள்ளலாம்.

1. **நிகரற்றது** - வசனம் 18
   ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு இருக்க விரும்பினான். ஆனால், ஆண்டவர் இயேசு கிறிஸ்து அவனைப் “போ” என சொன்னார். நம் ஒவ்வொருவருக்கும் தன்னிகரான ஊழியமுண்டு

2. **தனிப்பட்ட பொறுப்பு** - வசனம் 19
   வீட்டில் சுவிசேஷம் சொல்வதிலிருந்து ஆரம்பியுங்கள். எங்களுக்கு நெருக்கமான சுற்றுவட்டங்களிலிருந்தே நாம் ஆரம்பிக்க வேண்டும். நம்மால் என்ன செய்ய முடியுமோ, அதை செய்ய வேண்டும்.

3. **கர்த்தருடைய சித்தம்** - வசனம் 18-20
   இவனுடைய விருப்பம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்றிருந்தாலும், தேவனுடைய சித்தத்திற்கு அவன் கீழ்ப்படிந்து தன் ஜனங்களிடத்தில் சென்று தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள விருப்பமுடையவனாயிருந்தான்.

4. **அர்ப்பணிப்பு** - வசனம் 20
   இவன் வெறுமனே, தன் உறவினர் நண்பர்களுக்கு மட்டுமன்றி, தெக்கப்போலி என்னும் நாடு வரையிலும் அனைவருக்கும் அறிவித்தான்.

5. **விசுவாசம் (faithful)** - வசனம் 20
   தாமதமின்றி, உடனடியாகவே போனான்.



# சத்தியமாய் சாத்தியமா?

சபையின் சரித்திரத்தில் சபைத்தலைவர்க்காய் சாகசங்கள்

வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது போல வாழ்வது தற்கால உலகத்துக்கு பொருந்தாது என்பதே இன்றைய நவீன யுகத்தில் வாழும் நம்மில் பலரது குறிப்பாக இளைஞர்களது எண்ணமும் கருத்துமாகும். எபிரேயர் 11ல் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த விசுவாச வீரர்களின் பெயர்ப்பட்டியல் நமக்கு நினைவுறுத்துவது நாமும் அவர்களைப்போல வாழ வேண்டும் என்பதையே.

கிறிஸ்தவனாய் வாழ்வதில் எத்தனை பாடுகள் இருப்பினும் உண்மையான கிறிஸ்தவனாய் வாழ்வது சத்தியமாய் சாத்தியமா? அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் ஹட்சன் டெய்லர்.

## ஹட்சன் டெய்லர்

சிறுவன் ஹட்சன் தன் தகப்பனார் சொல்லுவதை மிக ஆர்வத்தோடு கேட்பான். அவர் அவனுக்குப் பல காரியங்களைப்பற்றி விவரித்து வந்தார். இச்சமயத்தில் அவர்களுடைய பேச்சு சீன நாட்டைப்பற்றியதாக இருந்தது.

உலகின் பல பாகங்களில் புதிய மிஷனரி இயக்கங்கள் உருவாகி செயல்ப்பட்டு வந்தன. ஆனால் சீன தேசத்திற்கான மிஷனரி திட்டங்கள் ஒன்று உருவாகி செயல்ப்படவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கு முன் மரித்துப்போன கடைசி சீன மிஷனரிக்குப் பிறபு ஒரு மிஷனரியையும் அனுப்ப முயற்சிகள் எடுக்கப்படவில்லை. நான்கு அல்லது ஐந்து வயது நிரம்பிய ஹட்சன் இதைக் கேள்விப்பட்டபோது நான் வாலிபனாகும் போது மிஷனரியாகச் சீனாவுக்கு செல்லுவேன் என்றார்.

### மனந்திரும்புதலும் அழைப்பும்

இங்கிலாந்து தேசத்தில் 1832ம் அண்டு மே 21 ம் நாள் ஹட்சன் டெய்லர் பிறந்த இவர் சிறு பிராயம் முதல் ஹட்சன் ஆவிக்குரிய வாழ்க்கையின் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டான். அவன் 14 வயதாய் இருக்கும்போது, ஒரு ஞாயிறு மாலையில் கைப்பிரதி ஒன்றை வாசித்தான். அதன் தலைப்பு “எல்லாம் முடிந்தது” என்பதாகும். அதை வாசித்தபோது அவனுக்குள் பாவ உணர்வு வந்தது. இரட்சிப்பின் தேவையை உணர்ந்தான். அந்த நேரமே கிறிஸ்து இயேசுவைத் தன் சொந்த ஆத்தும மீட்பராக ஏற்றுக்கொண்டான். அவனுடைய தாயார் வெளியூர் சென்று திரும்பியதும் தன் மீட்பின் அனுபவத்தைக் கூறினான். அவள் தன் மகனிடம் இந்த நிகழ்ச்சி அவளுக்கு முன்பே தெரியும் என்றாள். ஹட்சன் மிக ஆச்சரியத்துடன் தன் தாயைப் பார்த்து, எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது என்றான். அவள் 70, 80 மைல்களுக்கப்பால் இருந்தபோது அவளுடைய உள்ளத்தில் மகனைப் பற்றிய மனபாரம் ஏற்பட்டது. ஹட்சன் மனம் திரும்பிய அதேநாளில் அவனுடைய தாயும் ஹட்சன் இரட்சிக்கப்படவேண்டுமென்று ஊக்கமாய் ஜெபித்தார்கள். தன் மகனைக் கர்த்தர் முழுவதுமாக மீட்டுக்கொண்டார் என்ற நிச்சயம் தனக்குள் ஏற்படும்வரை தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருந்தார். பின் தன் மகனைக் கர்த்தர் இரட்சித்ததற்காக நன்றி செலுத்தி ஸ்தோத்திரம் செய்தார்.

ஒருநாள், வரும்காலத்தில் தேவன் தம்மைப் பயன்படுத்த கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, ஆண்டவரே நான் என்னவிதமான பணியை, எங்கு செய்வேண்டுமென்று எனக்குத் திட்டமாய் தெரிவியும். நீர் எனக்குச் சொல்லும்வரை இந்த அறையிலிருந்து வெளியேறமாட்டேன் என்று முழங்காலில் இருந்த வண்ணமாக மன்றாடினார். எனக்காக சீன தேசத்திற்குப் போ என்று தேவன் தன்னோடு பேசுவதைத் திட்டவட்டமாய்க் கேட்டார். அன்றிலிருந்து அவர் மனம் சீன நாட்டின் பணியின்மேல் நிலைத்து நின்றது. தேவ அழைப்பைப் பெற்ற ஹட்சன் டெய்லர் பிற்காலத்தில் அந்த அழைப்பைப்பற்றி ஒருபோதும் சந்தேகித்ததில்லை. இந்நிகழ்ச்சி அவர் மறுபிறப்படைந்த சில மாதங்களில் நடைபெற்றது.

### மிஷனரிப் பணிக்கென ஆயத்தப்படுதல்

சீன தேசத்தில் திரும்பணி செய்வதற்கென்று தன்னை எல்லா விதங்களிலும் ஆயத்தம் செய்துகொள்ள முயன்றார் ஹட்சன். மிகுந்த பிரயாசத்துடன் லூக்கா எழுதின நற்செய்தி நூலை, சீன மொழியில் கற்றுப் புலமை பெற்றார். ஆசிரியர் உதவியில்லாமலேயே சீன மொழியைக் கற்றுக் கொண்டார். அவன் தன்னை மிகக் கட்டுப்பாடான ஒழுக்க வாழ்க்கைக்கு கொண்டு வந்தார்.

### சீன நாட்டில் பிரவேசித்தல்

ஐந்தரை மாதங்கள் பிரயாணத்திற்குப் பின் இருபத்திரெண்டு வயதான இளம் வாலிபனான ஹட்சன், சீன தேசத்தில் ஷாங்காய் துறைமுகத்தில் வந்து இறங்கிய போது அவரை வரவேற்க ஒருவரும் இல்லை. நண்பர்களும் யாரும் இல்லை. கடவுளின் பேரில் அவருக்கிருந்த விசுவாசமே, அவரைத் தாங்கிப் பிடித்தது.

சீனரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்த இவர் மிகத் துடிப்பாய் இருந்தார். ஹட்சனின் நினைவும் மனமும் உள்நாட்டுச் சீனர்களைப் போய் அடைவதையே இலட்சியமாகக் கொண்டிருந்தது. பவுல் அடியாரின் முன்மாதிரியின்படி, சிலரை யாவது இரட்சிக்கும்படியாக நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன் என்றபடி இவரும் சீன உடைகளை உடுத்தி, சீன வாழ்க்கை முறையை மேற்கொண்டார். அவ்விதம் அவர் அவர்கள் மத்தியில் உழைத்து பலன் தந்தது. சில மாதங்களில் மனம் திரும்பிய முதல் ஆத்துமாவை ஆதாயப்படுத்திவிட்டார்.

### பிரச்சனைகள் சூழ்ந்தும் அதைரியப்படவில்லை

டெய்லர் தன்னுடைய பணியில் அடிக்கடி சோர்வடைய சோதிக்கப்பட்டார். எதிர்காலம் அவருக்கு இருளாகவே இருந்தது. எதிர்பாராத சீன புரட்சி சம்பவங்கள், அவருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற போதும் ஹட்சன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதைவிட, உள்நாட்டு மக்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதே அவருக்குப் பிரதானமாய்க் காணப்பட்டது. நிங்போ நகருக்குச் செல்லும் வழியில் அவருடைய வேலைக்காரன் எல்லா உடைமைகளையும் திருடிக்கொண்டு அவரைத் தனியே விட்டு ஓடிப்போனான். ஆகாரக் குறைவினாலும், தூக்கமின்மையாலும் ஆயாசப்பட்டவராய், அதிகக் களைப்படைந்தார். சரீரம் பெலவீனப்பட்டதால் பாதை ஓரத்தில் மயங்கி விழுந்தார். இந்நிலையிலும் அவருடைய பிரதான நோக்கம், தன்னைச் சுற்றிலுமுள்ள சீனர்களைப் பற்றியதே ஆகும். தன் உடைமைகளை இழந்ததினால் ஏற்பட்ட தவிப்பு அவரிடம் காணப்படவில்லை.

கிறிஸ்துவை உடனடியாகவே பிரசங்கிக்க ஆரம்பித்துவிட்டார். மரியா டையர் என்ற நங்கை-யை நிங்போ நகரில் சந்தித்து திருமணம் செய்து கொண்டார். இருவரும் சேர்ந்து நோயுற்றோரைக் கவனிப்பதிலும், சீனர்களுக்குச் சுவிசேஷ-த்தைப் பிரசங்கிப்பதிலும் ஈடுபட்டனர். நீண்ட நேரப் படிப்பு, பல வேறுபட்ட பருவநிலைகளில் நீண்ட பிரயாணங்களை மேற்கொள்ளுவது ஆகியவை டெய்லர் அவர்களின் சுகத்தைப் பெரிதும் பாதித்தது. ஏழு ஆண்டுகள் இடைவிடாத சேவைக்குப்பின், அவருடைய சுகவீனத்தின் காரணமாக இங்கிலாந்து தேசம் செல்ல நேரிட்டது. ஓய்வு எடுக்கவும், நற்சுகம் பெறவும் சுய தேசத்திற்குத் திரு-ம்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

### சீன நாட்டை மறுமுறை வந்தடைதல்

ஷாங்காய் துறைமுகத்தில் வந்து சேர்ந்த அனைத்து மிஷனரிகளும், உயிர் ஆபத்துகளுக்குப் பயப்படாமல் உள்நாட்டிற்குள் போகத் தீர்மானித்தனர். இந்தக் குழுவிற்கு இளமை மிக்க டெய்லர், தளபதியாக தலைமை ஏற்று நடத்திச் சென்றார். அநேகம் முறை அவர்களுக்கு தங்கும் வசதியோ ஏற்ற ஆகாரமோ இருந்ததில்லை. கர்த்தரை நம்பினபடியினால் அவரே அவர்களுடைய தேவை எல்லாவற்றையும் சந்தித்தார். சிறு பிள்ளைக்கொத்த எளிய விசுவாசமே, டெய்லர் அவர்களின் வெற்றியின் இரகசியமாய் இருந்தது.

அவருடைய மனைவி பன்னிரண்டரை ஆண்டுகள் அவருக்கு மிக உதவியாக இருந்தவள், கலாரா வியாதியினால் மரித்துப் போனாள். அவர் அதிகமாய் நேசித்த அருமை மகள் இறந்தபோது, எங்கள் இதயங்கள் வெடித்துச் சிதறு-கின்றன. இந்த அனுபவம் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்து நிற்கின்றன. எங்கள் இயேசு எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார் என்றும், அவர் மனைவி இறந்தபோது, நானோ தனித்து விடப்பட்டவன் அல்ல. முன்னைக் காட்டிலும் கர்த்தர் எனக்கு அதிக நெருக்கமாக உள்ளார் என்றும் எழுதி வைத்தார். ஹட்சன் இப்படிப்பட்ட பெரும் இழப்புகளைக் கிறிஸ்துவின் நிமித்தம் தைரியத்-தோடு தாங்கிக்கொண்டார்.

### சீன தேசமே எப்போதும் அவர் நினைவு

ஹட்சன் டெய்லர் பலமுறை இங்கிலாந்திற்கு வந்தபோதிலும், அவர் நினைவெல்லாம் சீனநாட்டைப் பற்றியதே. அதனால் அவர் திருப்பணிக்குத் திரும்பிவிடுவார். இரண்டாவது முறையும் திருமணம் செய்துகொண்டு சீன தேசத்தின் ஒவ்வொரு பட்டணத்தையும் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தத் தீர்மானித்-தார். அவருடைய முதுகெலும்பில் விபத்தால் ஏற்பட்ட காயத்தினிமித்தம், பல மாதங்கள் படுக்கையில் இருக்க வேண்டியதாயிற்று. சுகவீன நாட்களோ, கடவுள் அவருக்கு தெளிவான வெளிப்பாடுகளைத் தந்தருளிய நாட்களாகும். நான்கு வருடங்கள் கழித்து அவர் தமது இரண்டாவது மனைவியையும் இழந்துவிட்டார்.

டெய்லர் இங்கிலாந்து தேசத்தில் தங்கியிருக்க மனமற்றவராய் 1905ம் ஆண்டு தன்னுடைய பதினோராவது பயணத்தை மேற்கொண்டார். இங்கிலாந்திலிருந்து சீனாவுக்குச் சென்ற கடைசிப் பயணமாகவும் அது அமைந்தது. சீன நாட்டில் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் சாங்ஷா பட்டணத்திற்குச் செல்ல விரும்பினார். அப்பட்டணம் அவருடைய திருப்பணித் திட்டத்தில் இருந்த கடைசி மாநிலத்தின் தலைநகரமாகும். அந்நகரை சுவிசேஷத்தின் ஆரம்பப்பணி-

க்கென்று திறந்துவிட வந்து சேர்ந்தார். சாங்ஷா நகரில் அவர் வந்து இறங்கிய-துமே, கடவுளோடு ஐக்கியப்படும்படியாகப் பரலோகம் சென்றடைந்தார்.

ஹட்சன் டெய்லர் இறக்கும்போது, சீன உள்நாட்டு ஸ்தாபனத்தில் எண்ணூற்று நாற்பத்தொன்பது மிஷனரிகள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். சீன நாடு கம்மினியூஸ்டுகளால் ஆக்கிரமிப்புச் செய்ப்படும்வரை, சீன உள்நாட்டு மிஷன் கிறிஸ்துவின் சேவையில் ஈடுபட்டிருந்தது. ஹட்சன் யெட்லர் உலக ஐசுவரியம் ஒன்றும் இல்லாதவர். வறுமையில் வாழ்ந்தவர். வாழ்க்கை வசதிகளை உதறித் தள்ளி, அநேகரை ஐசுவரியான்களாக்-கத் தன்னை ஏழ்மையாக்கினார். ஜீவனுள்ள தேவனை முழுவதுமாய் நம்பிச் சார்ந்ததே இவர் வாழ்க்கையின் இரகசியம். வேத வசனங்களில் காணப்படும் வாக்குகளை எல்லாம் நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டவர். தேவன் எவைகளை-யெல்லாம் தமது வசனத்தில் வாக்குத்தத்தம் செய்திருக்கிறாரோ, அவைகளை நிச்சயம் செய்வார் என்ற உறுதியோடு பணியாற்றினார். கைகூடாது, நடக்க-வே நடக்காது, ஒருவரும் செய்யமுடியாது என்று மனிதன் நினைப்பவைகளைப் பார்த்து விசுவாசம் என்னும் பற்றுறுதி சிரிக்கும். கீழ்ப்படிதலும், கடவுளுடைய சித்தத்தை செய்தலும், கேள்விகளைக் கேட்டு தாமதிக்கும் மனப்பான்மையைக் கொண்டு வராது என்னும் பொன் மொழிகளை ஹட்சன் அடிக்கடி கூறுவார். விசுவாசமும் கீழ்ப்படிதலும், கர்த்தருடைய திருப்பணியாளர்களின் வல்ல செயல்களின் இரகசியமாகும். நீயும் கர்த்தருடைய பணியில் விசுவாசத்தோடு கீழ்ப்படிவாயோ?

தொடரும்........

# என் மறு பெயர் என்ன?

பின்வரும் நபர்களின் மறுபெயர்களை கீழுள்ள கூட்டினுள் சரியாக கண்டு பிடித்து வட்டமிடுக. அவை இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ அல்லது மூலைவிட்ட வரி யிலோ இருக்கலாம்.

1. பெனொனி 2. யோசுவா 3. மேஷாக் 4. ததேயு 5. சீமோன்
6. தோமா 7. பவுல் 8. யாக்கோபு 9. தானியேல் 10. பர்சபா
11. தபீத்தாள் 12. யோவான் 13. பர்னபா 14. சாராள் 15. மத்தேயு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சா | ஸ் | ஓ | சே | யா | கா | யீ | ல் | இ | ன் |
| ரா | பெ | ன் | ய | மீ | ன் | அ | ஸ் | சி | ம் |
| ய் | தொ | ம | லே | ஷா | த | ர | லெ | பே | யு |
| கு | ற் | மா | வி | வே | வே | யோ | சே | து | ஸ் |
| சி | கா | ச | வு | ல் | தி | தி | மு | ரு | து |
| டி | ள் | பெ | ல் | தெ | ஷா | த் | சா | ர் | லை |

# உங்களுக்கு தெரியுமா?





நுண்ணுயிரியல் விஞ்ஞானத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் **லூவி பாஸ்ச்சர்.** விஷக்கிருமிகள் மூலம் நோய்ப் பரவுவதன் உண்மையைக் கண்டுபிடித்தவர். சார்ள்ஸ் டார்வினின் பரிணாமவாதக் கொள்கைக்கு பலத்த எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, இயேசு கிறிஸ்துவுக்குள் ஆழமான விசுவாசத்துடன் வாழ்ந்தவர்.



மின்காந்தத்துறை நியமத்திற்கான கோட்பாடுகளையும் கணிதச் சட்டதிட்டங்களையும் கட்டியெழுப்பின **ஜோசப் க்ளார்க் மெக்சுவல்** என்பவர், ஐசக் நியூட்டனுக்குப்பின் பௌதீகவியலை மேம்படுத்த அதிக பங்களிப்பு செய்தவர் என்ற புகழுக்கு உரியவர். “பூமியைக் கீழ்ப்படுத்தி அதை ஆண்டு கொள்ளுங்கள்” என பரிசுத்த வேதாகமத்தில் தேவன் ஈந்த கட்டளைகள் விஞ்ஞான அடிப்படையிலான மீளாய்வுக்கு தன்னை ஏவியதாக இவர் விபரிக்கிறார்.



**ஜோன் எம்புருஸ் ப்ளெமிங்** இலத்திரனியல் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்ட விஞ்ஞானியாவார். 1945ல் இவர் மரிக்கும் போது “பரிணாமவாதக் கொள்கையின் எதிர்ப்பு அமைப்பு” இவர் தலைமையில் நிறுவப்பட்டிருந்தது.

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..........................................................................................

**முகவரி:** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**ஒப்பம்:** ..........................................................................................

# ஜீவ ஒளி



கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:


Jeeva Oli

Christian Fellowship Centre

7, Vivekananda Road, Wellawatte,

Colombo 6.

Tel: 2581901

www.christianfellowshipcentre.com